# மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவுக்கு ஒப்புதல்

**புது தில்லி, செப். 20:** மக்களவை, சட்டப்பேரவைகளில் மகளிருக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு அளிக்க வகை செய்யும் மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவுக்கு மக்களவை புதன்கிழமை ஒப்புதல் அளித்தது.

இந்த மசோதா மீது சுமார் 8 மணி நேரம் நடைபெற்ற விவாதத்தில் 60 உறுப்பினர்கள் பங்கேற்று பேசிய பின்பு நடைபெற்ற வாக்கெடுப்பில் மசோதாவுக்கு ஆதரவாக 454 உறுப்பினர்களும், எதிராக அகில இந்திய மஜ்லிஸ் கட்சி உறுப்பினர்கள் இருவர் மட்டும் வாக்களித்தனர்.

இந்த மசோதா மாநிலங்களவையில் வியாழக்கிழமை தாக்கல் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நாடாளுமன்ற புதிய கட்டடத்தில் முதல் மசோதாவாக மகளிர் இட ஒதுக்கீடு மசோதா செவ்வாய்க்கிழமை தாக்கல் செய்யப்பட்டது.

இதன் மீதான விவாதம் புதன்கிழமை தொடங்கியது.

விவாதத்தை தொடங்கி வைத்துப் பேசிய காங்கிரஸ் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சோனியா காந்தி, 'மகளிர் இட ஒதுக்கீட்டில் இதர பிற்படுத்தப்பட்ட பிரிவைச் சேர்ந்த பெண்களுக்கும் உள்ஒதுக்கீடு வழங்க வேண்டும்' என வலியுறுத்தினார்.

திமுக உறுப்பினர் கனிமொழி பேசுகையில், 'இது பெண்களுக்கான இட ஒதுக்கீடு என்பதல்ல, ஒருசார்பையும், அநீதியையும் அகற்றுவதாகும். தொகுதி மறுவரையறைக்குப் பின்னர் என்று இல்லாமல் உடனடியாக இட ஒதுக்கீட்டை அமல்படுத்த வேண்டும்' என்றார்.

திரிணமூல் காங்கிரஸ் உறுப்பினர் மஹுவா மொய்த்ரா பேசுகையில், 'தெரியாத இரண்டு முக்கியத் தேதிகளின் அடிப்படையில் மகளிர் இட ஒதுக்கீடு மசோதா அமலாக்கம் உள்ளது. இந்த இட ஒதுக்கீடு 2029-இலும் சாத்தியமாகாது. தேர்தலுக்காக மத்திய பாஜக அரசின் மிகப்பெரிய ஏமாற்று வேலை இது' என்றார்.

## மக்களவையில் ஆதரவு 454; எதிர்ப்பு 2



மக்களவையில் மகளிர் இட ஒதுக்கீட்டு மசோதா தொடர்பான வாக்கெடுப்பின்போது ஆதரவாக கையை உயர்த்திய உறுப்பினர்கள்.

## 2029-க்குப் பிறகு நடைமுறைக்கு வரும்: அமித் ஷா

'மக்களவை மற்றும் சட்டப்பேரவைகளில் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்க வகை செய்யும் மசோதா மக்களவையில் புதன்கிழமை நிறைவேற்றப்பட்ட நிலையில், 'இந்த மசோதா 2029-ஆம் ஆண்டுக்குப் பிறகு நடைமுறைக்கு வரும்' என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா கூறினார்.

மக்களவையில் இந்த மசோதா மீதான விவாதத்தின்போது அமித் ஷா பேசியதாவது: பிரதமர் மோடி தலைமையிலான அரசு மத்தியில் ஆட்சியை அமைத்தது முதல் பெண்களுக்கு அதிகாரமளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அந்த வரிசையில், தற்போது பெண்களுக்கான இட ஒதுக்கீடு மசோதாவுக்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறுவதற்கான முயற்சியை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது.

இது இந்த மசோதா மீது மேற்கொள்ளப்படும் ஐந்தாவது முயற்சியாகும். மசோதாவில் குறைகள் ஏதும் இருந்தால், அதைப் பின்னர் நிவர்த்தி செய்துகொள்ளலாம் என்றார்.

மேலும், இந்த மசோதாவை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் ஏற்பட வாய்ப்புள்ளது என்ற எதிர்க்கட்சிகளின் அச்சத்துக்கு பதிலளித்த அமித் ஷா, 'பொதுத் தேர்தலுக்குப் பிறகு மத்தியில் ஆட்சியமைக்கும் புதிய அரசு, உடனடியாக மக்கள்தொகை கணக்கெடுப்பையும், தொகுதி மறுவரையறை பணிகளையும் மேற்கொண்டு, பெண்களுக்கான இட ஒதுக்கீடு மசோதாவை நடைமுறைப்படுத்துவதற்கான செயல்முறையைத் தொடங்கி வைக்கும்.

அந்த வகையில், மக்களவை மற்றும் மாநில சட்டப்பேரவைகளில் பெண்களுக்கான 33 சதவீத இட ஒதுக்கீடு 2029-ஆம் ஆண்டுக்குப் பிறகு நடைமுறைக்கு வரும்' என்று குறிப்பிட்டார்.

தேசியவாத காங்கிரஸ் கட்சி எம்.பி. சுப்ரியா சுலே, 'மக்கள்தொகைக் கணக்கெடுப்பு, தொகுதி மறுவரையறை தேதியை உடனடியாக அறிவிக்க வேண்டும். இல்லையென்றால் இந்தச் சிறப்புக் கூட்டத்தொடர் தேவையற்றதாகிவிடும்' என்றார்.

எதிர்க்கட்சிகளின் 'இந்தியா' கூட்டணி உருவாகிய பின்புதான் மத்திய அரசு அச்சத்தில் மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவைக் கொண்டு வந்துள்ளது என அக்கூட்டணிக் கட்சி பெண் எம்.பி.க்கள் பேசினர்.

மகளிர் இட ஒதுக்கீடு மசோதா கொண்டுவரப்பட்டது பாஜக அரசின் சாதனை என அக்கட்சி பெண் எம்.பி.க்கள் பேசினர்.

மத்திய பெண்கள், குழந்தைகள் நலத் துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி, 'இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி, மகளிருக்கு இட ஒதுக்கீடு அளிக்க மக்கள்தொகைக் கணக்கெடுப்பு, தொகுதி மறுவரையறை ஆகியவை நடைபெற வேண்டியது கட்டாயம்' என்றார்.

**எதிர்ப்பு:** இந்த மசோதா உயர்வகுப்பு பெண்களுக்கு மட்டுமே பயனளிக்கும் என்று அகில இந்திய மஜ்லிஸ் கட்சியின் எம்.பி. அசாதுதீன் ஒவைசி மட்டும் எதிர்ப்பு தெரிவித்துப் பேசினார்.

இதையடுத்து நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் பிரதமர் மோடியும் பங்கேற்றார். இதில் மஜ்லிஸ் கட்சியின் இரண்டு உறுப்பினர்கள் மட்டும் மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து வாக்களித்தனர். 454 வாக்குகளுடன் மகளிர் இட ஒதுக்கீடு மசோதா மக்களவையில் நிறைவேறியது.

**பிரதமர் மகிழ்ச்சி:** மகளிர் இட ஒதுக்கீடு மசோதா மக்களவையில் நிறைவேற்றப்பட்டது மகிழ்ச்சி அளிக்கிறது. இதற்கு ஆதரவளித்த அனைத்துக் கட்சி எம்.பி.க்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என பிரதமர் நரேந்திர மோடி தனது 'எக்ஸ்' சமூகவலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.

# நெல்லை–சென்னை இடையே செப். 24 முதல் வந்தே பாரத் ரயில்

## காணொலியில் தொடங்கி வைக்கிறார் பிரதமர்

**திருநெல்வேலி, செப். 20:** திருநெல்வேலி– சென்னை இடையே வந்தே பாரத் விரைவு ரயில் சேவையை பிரதமர் நரேந்திர மோடி காணொலிக் காட்சி மூலம் ஞாயிற்றுக்கிழமை (செப். 24) தொடங்கி வைக்கிறார்.

இந்திய ரயில்வே சார்பில் பல்வேறு வசதிகளை உள்ளடக்கிய அதிநவீன வந்தே பாரத் ரயில்கள் அறிமுகம் செய்யப்பட்டு நாட்டின் முக்கிய நகரங்களுக்கு இயக்கப்பட்டு வருகின்றன. தமிழகத்தில் சென்னை–மைசூரு, சென்னை–கோவை இடையே வந்தே பாரத் ரயில்கள் இயக்கப்பட்டு வரும் நிலையில், அடுத்ததாக திருநெல்வேலி–சென்னை இடையே வரும் 24–ஆம் தேதி முதல் வந்தே பாரத் விரைவு ரயில் இயக்கப்படவுள்ளது.

திருநெல்வேலி–சென்னை இடையே வந்தே பாரத் விரைவு ரயிலை இயக்குவதற்காக திருநெல்வேலி சந்திப்பு ரயில் நிலையத்தில் மின்மயமாக்கல் பணிகள், வந்தே பாரத் ரயில் பெட்டிகளைப் பராமரிக்கத் தேவையான முற்றிலும் மின்மயமாக்கப்பட்ட 'பிட் லைன்' பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

திருநெல்வேலி–சென்னை இடையிலான வந்தே பாரத் விரைவு ரயிலின் தொடக்க விழா திருநெல்வேலி சந்திப்பு ரயில் நிலையத்தில் ஞாயிற்றுக்கிழமை (செப். 24) முற்பகல் 11.30 முதல் 12 மணிக்குள் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திருநெல்வேலி சந்திப்பு ரயில் நிலையத்தில் இதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை மதுரை ரயில்வே கோட்ட மேலாளர் பத்மநாபன் அனந்த் புதன்கிழமை ஆய்வு செய்தார். பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

பிரதமர் மோடி செப். 24–இல்



'மனதின் குரல்' நிகழ்ச்சிக்குப் பிறகு நாடு முழுவதும் 9 வந்தே பாரத் ரயில் சேவைகளை காணொலி காட்சி மூலம் தொடங்கி வைக்கிறார். தெற்கு ரயில்வேயில் காசர்கோடு–திருவனந்தபுரம், சென்னை–விஜயவாடா, திருநெல்வேலி–சென்னை ஆகிய 3 வந்தே பாரத் விரைவு ரயில் சேவைகள் தொடங்கி வைக்கப்படுகின்றன.

திருநெல்வேலி–சென்னை இடையிலான வந்தே பாரத் விரைவு ரயில் முதல் கட்டமாக விருதுநகர், மதுரை, திண்டுக்கல், திருச்சி உள்ளிட்ட இடங்களில் நின்று செல்லும். மேலும் சில இடங்களில் நின்று செல்ல பயணிகள் கோரிக்கை வைத்துள்ளனர். அது குறித்து பரிசீலனை செய்யப்படும். திருநெல்வேலி–சென்னை இடையிலான வந்தே பாரத் விரைவு ரயிலில் 8 பெட்டிகள் இடம்பெறும். தேவைக்கேற்ப பெட்டிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும். இந்த ரயிலுக்கான கட்டணம் உள்ளிட்ட விவரங்களை ஓரிரு நாள்களில் ரயில்வே அமைச்சகம் வெளியிடும் என்றார்.

திருநெல்வேலி–சென்னை இடையிலான வந்தே பாரத் விரைவு ரயில் தினமும் திருநெல்வேலியிலிருந்து காலை 6 மணிக்கு புறப்பட்டு பிற்பகல் 1.50 மணிக்கு சென்னையை சென்றடையும். மறுமார்க்கத்தில் சென்னையிலிருந்து பிற்பகல் 2.50 மணிக்கு புறப்பட்டு இரவு 10.40 மணிக்கு திருநெல்வேலியை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மாற்றம் ஏற்றம் தரட்டும்!

ஜனநாயக இந்தியாவின் வரலாற்றில் திருப்புமுனையாக அமைந்திருக்கிறது புதிய நாடாளுமன்ற கட்டடத்தில் நடந்துகொண்டிருக்கும் ஐந்து நாள் சிறப்புக் கூட்டத் தொடர். அதற்கான முக்கியத்துவத்தை உணர்த்தவும், உறுதிப்படுத்தவும் நரேந்திர மோடி தலைமையிலான அரசு மகளிர் இடஒதுக்கீட்டு மசோதாவை அறிமுகப்படுத்தி மக்களவையில் நிறைவேற்றியிருக்கிறது.

புதிய நாடாளுமன்ற கட்டடத்திற்கு மாறுவதற்கு முன்னால், ஐந்து நாள் கூட்டத்தொடரின் முதல் நாள் நிகழ்வு பழைய நாடாளுமன்றக் கட்டடத்தில் நடத்தப்பட்டது. அதில் உரையாற்றும்போது பிரதமர் நரேந்திர மோடி வட்ட வடிவிலான அந்த கட்டடத்தின் வரலாற்று முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டார். இங்குதான் காலனிய ஆட்சியாளர்களிடமிருந்து சுதந்திர இந்தியாவுக்கு ஆட்சி மாற்றம் நடந்தது என்பதையும், இந்தியக் குடியரசின் அரசியல் சாசனம் உறுப்பினர்களால் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது என்பதையும் அவர் நினைவுகூர்ந்தார்.

பழைய நாடாளுமன்றக் கட்டடத்தின் மைய மண்டபத்தில்தான் சுதந்திர இந்தியாவின் தேசியக் கொடியும், நாட்டுப் பண்ணும் அங்கீகாரம் பெற்றன. இந்தியா, குடியரசாகத் தன்னை அறிவித்துக்கொண்டது முதல் 41 உலக நாடுகளின் தலைவர்கள் விருந்தினர்களாக அழைக்கப்பட்டு இந்திய நாடாளுமன்றத்தில் உரையாற்றி இருக்கிறார்கள். இந்தியாவின் குடியரசுத் தலைவர்களாக இருந்தவர்கள் 86 முறை நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றி இருக்கிறார்கள். நாடாளுமன்றம் கடந்த 70 ஆண்டுகளில் 4,000-க்கும் அதிகமான மசோதாக்களை நிறைவேற்றி சட்டமாக்கி இருக்கிறது.

நவீன இந்தியாவின் உதயத்துக்கும் வளர்ச்சிக்கும் கடந்த ஒரு நூற்றாண்டாக பழைய நாடாளுமன்றக் கட்டடம் சாட்சியாக இருந்திருக்கிறது. அதில் வரலாற்று முக்கியத்துவம் பெற்ற உரைகளும், விவாதங்களும், புரட்சிகரமான பல தீர்மானங்களும் இடம் பெற்றிருக்கின்றன.

1911 டிசம்பர் 12-ஆம் தேதி பிரிட்டிஷ் இந்தியாவின் தலைநகரம் கொல்கத்தாவிலிருந்து தில்லிக்கு மாறியபோது, வட்ட வடிவ நாடாளுமன்றமும், அதைச் சுற்றியுள்ள கட்டடங்களும் லுட்யூன்ஸ், ஹெர்பட் பேக்கர் ஆகியோரால் கட்டப்பட்டன. 1927 ஜனவரியில் செயல்படத் தொடங்கிய அந்தக் கட்டடத்தில், இந்தியா விடுதலை பெற்ற 1947 வரை பிரிட்டிஷ் காலனிய ஆட்சியின் 'லெஜிஸ்லேட்டிவ் கௌன்சில்' செயல்பட்டது. அதன் பிறகு இந்தியாவின் அரசியல் சாசன சபை அதில்தான் கூடியது. இந்திய அரசியல் சாசனம் நடைமுறைக்கு வந்த 1950 ஜனவரி 26 முதல் அது நாடாளுமன்றமாக மாறியது.

1947 ஆகஸ்ட் 14 நள்ளிரவில் இந்தியாவின் முதல் பிரதமர் பண்டித ஜவாஹர்லால் நேரு நிகழ்த்திய உரையுடன் சுதந்திர இந்தியாவின் நாடாளுமன்ற வரலாறு தொடங்குகிறது. 'நீண்டகாலமாக விதியுடன் நாம் நடத்திய போராட்டத்தின் எதிர்பார்ப்புகள் நிறைவேறும் தருணம் கூடி வந்திருக்கிறது. உலகம் உறங்கிக் கொண்டிருக்கும் இன்றைய நடுநிசி நேரத்தில் இந்தியா விடுதலைக்கும் வாழ்வுக்கும் உயிர்த்தெழுகிறது' என்று தொடங்கும் பண்டித ஜவாஹர்லால் நேரு தனது கைப்பட எழுதி ஆற்றிய உரை இப்போதும் பாதுகாக்கப்படுகிறது.

1949 நவம்பர் 25-ஆம் தேதி அரசியல் சாசன சபையில் அன்றைய பண்டித நேருவின் அமைச்சரவையில் சட்ட அமைச்சராக இருந்து, அரசியல் சாசனத்தை உருவாக்கிய பாபா சாஹேப் அம்பேத்கரின் 'அராஜகத்தின் இலக்கணம்' (கிராமர் ஆஃப் அனார்கி) உரையும் சரித்திரப் புகழ் பெற்றது. ரத்தம் சிந்தும் புரட்சிகளை தனது உரையில் நிராகரித்தார் அம்பேத்கர். சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் உள்ள குறிக்கோள்களை அடைவதற்கு அரசியல் சட்ட ரீதியிலான வழிகள் இருக்கும்போது, வன்முறைகளைப் பின்பற்றுவது அராஜக வழிமுறை என்றும், அவற்றைக் கைவிட வேண்டும் என்றும் தனது உரையில் பாபா சாஹேப் குறிப்பிட்டிருந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோதும், எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோதும், பிரதமராக இருந்தபோதும் அடல் பிகாரி வாஜ்பாய் ஆற்றிய உரை ஒவ்வொன்றும் சிறப்பு வாய்ந்தது. 13 நாள் பிரதமராக இருந்து 1996 ஜூன் 1-ஆம் தேதி பதவி விலகுவதற்கு முன்னால், வாஜ்பாய் நிகழ்த்திய உரை, நாடாளுமன்ற வரலாற்றில் மட்டுமல்ல இந்திய ஜனநாயகத்தின் சரித்திரத்திலும் இடம்பெறும் ஆவணப் பதிவு.

1950 மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1954 சிறப்பு திருமணச் சட்டம், 1961 வரதட்சிணை தடுப்புச் சட்டம், 1972 வனவிலங்குகள் பாதுகாப்புச் சட்டம், 1976 42-ஆவது அரசியல் சாசன திருத்தச் சட்டம், 1980 தேசிய பாதுகாப்புச் சட்டம், 1985 கட்சித் தாவல் தடுப்புச் சட்டம், 1986 சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம், 2002 கருப்புப் பண ஒழிப்புச் சட்டம், 2005 தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2012 போக்ஸோ சட்டம், 2013 லோக்பால், லோக் ஆயுக்த சட்டம், 2019 ஜம்மு - காஷ்மீர் மறுசீரமைப்புச் சட்டம் உள்ளிட்ட பல முக்கியத்துவம் வாய்ந்த சட்டங்களுக்கு கடந்த 70 ஆண்டுகளில் இந்தியாவின் பழைய நாடாளுமன்றக் கட்டடம் காரணமாக இருந்திருக்கிறது.

24,281 சதுர மீட்டர் பரப்பளவுள்ள வட்ட வடிவிலான பழைய நாடாளுமன்றக் கட்டடத்திலிருந்து, இந்திய ஜனநாயகம் 64,500 சதுர மீட்டர் பரப்பளவுள்ள புதிய கட்டடத்துக்கு மாறியுள்ள பெருமைமிகு தருணம் இது. காலனிய இந்தியாவின் உணர்வுகளிலிருந்து முற்றிலுமாக விடுபட்டு, வலிமைமிக்க பொருளாதாரமாக பாரதம் உயர்ந்திருப்பதன் அடையாளம் இந்த மாற்றம். நல்லவை தொடர வேண்டும்; அல்லவை தவிர்க்கப்பட வேண்டும்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# இயற்கை வளம் காப்போம்

பாறப்புறத் இராதாகிருஷ்ணன்

வடக்கு ஆப்பிரிக்காவில் உள்ள மொராக்கோவில் சமீபத்தில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நில நடுக்கத்தால் மூவாயிரத்திற்கும் அதிகமானோர் உயிரிழந்து விட்டதாகவும், ஆறாயிரத்திற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளதாகவும், ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.8 ஆகப் பதிவாகியுள்ளது.

மொராக்கோவின் நான்காவது பெரிய நகரான மரகேஷிலும், தெற்கில் பல பகுதிகளிலும் ஏராளமான மக்கள் உயிரிழந்துள்ளனர். நாட்டின் மூன்றில் ஒரு பகுதி நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டிருப்பதால் பலி எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கக் கூடும் என்று தெரிகிறது.

ஆப்பிரிக்க புவித் தகடும், யூரோ ஆசிய புவித் தகடும் ஒன்றையொன்று சந்திக்கும் அட்லஸ் மலைத்தொடர் பகுதியில் அவ்வப்போது நிலநடுக்கம் ஏற்பட்டு வருகிறது. இது அட்லஸ் மலைத்தொடரைத் தொடர்ந்து மேல்நோக்கித் தள்ளும் உந்துதலுடன் தொடர்புடையதாக இருக்கும்.

அடிப்படையில், மொராக்கோ நிலநடுக்கம் நிகழும் இடம் இல்லை என்றும், கண்டங்களைச் சுமந்து நகரும் கண்டத்தட்டுகள் இடையே மோதல் ஏற்படும் போது நிலநடுக்கம் ஏற்படுகிறது என்றும், மரகேஷுக்கு தென்மேற்கே 71 கி.மீ. தொலைவில் உள்ள ஹை அட்லஸ் மலைகளில் 18.5 கி.மீ. ஆழத்தில் நிலநடுக்க மையம் கொண்டிருந்தாகவும் அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தின் அதிர்வுகள் ஸ்பெயின், போர்ச்சுகல், அல்ஜீரியா உள்ளிட்ட நாடுகளிலும் உணரப்பட்டன. நிலநடுக்கத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள அட்லஸ் மலைத் தொடரில் உள்ள தொலைதூர கிராமங்களுக்குச் செல்வதில் பெரும் சிரமம் இருப்பதாகவும், மலையிலுள்ள கிராமங்கள் நாட்டின் மற்ற பகுதிகளிலிருந்து துண்டிக்கப்பட்டுள்ளதாலும், அங்குள்ள மக்கள் பசி, பட்டினியால் வாடுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இயற்கையின் சீற்றம் மொராக்கோவைத் தாண்டி வட ஆப்பிரிக்காவில் உள்ள லிபியாவையும் சீண்டியுள்ளது. இந்நாட்டின் வடக்கே மத்திய தரைக்கடலும், கிழக்கில் எகிப்து, தென்கிழக்கில் சூடான், தெற்கில் சாட் நைஜர் ஆகியனவும், மேற்கில் அல்ஜீரியா, துனீசியா ஆகியனவும் எல்லைகளாக அமைந்துள்ளன. இதன் தலைநகர் திரிபாலி ஆகும்.

லிபியாவில் சர்வாதிகார ஆட்சி செலுத்தி வந்த கடாஃபியின் ஆட்சியை நோட்டோவின் ஆதரவுடன் கிளர்ச்சியாளர்கள் கடந்த 2011-ஆம் ஆண்டு கவிழ்த்தனர். அதன் பிறகு பல்வேறு ஆயுதக் குழுக்கள் மோதிக் கொண்ட, அமைதியற்ற சூழலில், அந்த நாட்டின் மேற்குப் பகுதியில் திரிபாலியைத் தலைநகராகக் கொண்டஓர் அரசும், அதற்குப் போட்டியாக கிழக்கே மற்றோர் அரசும் இயங்கி வருகின்றன.

மத்தியதரைக் கடலின் ஒரு பகுதியான அயோனியன் கடல் பகுதியில் உருவாகிய சக்தி வாய்ந்த 'டேனியல்' புயல், பங்காசி பகுதியில் கரையைக் கடந்தது. அப்போது மணிக்கு 165 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசியது. அப்போது பெய்த கனமழையில், அந்தப் பகுதியில் மலையிலிருந்து பாயும் வாடி டெர்ணா நதியின் குறுக்கே கட்டப்பட்டிருந்த அணை மிகப் பெரிய சத்தத்துடன் வெடித்து உடைந்து சிதறியது.

மலையின் அடிவாரத்தில் அமைந்திருந்த டெர்ணா நகருக்குள் வெள்ளம் வெகு சீற்றத்துடன் சுனாமி போல் பாய்ந்து, அங்கிருந்த இரண்டு அணைகளையும், நான்கு பாலங்களையும் வீடுகளை உடைத்து அவற்றின் இடிபாடுகளையும், அங்கிருந்த வாகனங்கள் உள்ளிட்ட பிற பொருள்களையும் அருகிலுள்ள கடலுக்குள் அடித்துச் சென்றுள்ளது. நாட்டின் பெரும் பகுதி நீரில் மூழ்கி விட்டது.

'நான் இதைக் கண்டு அதிர்ச்சியடைந்து உறைந்து போனேன். இது ஒரு சுனாமி போன்றது. டெர்ணாவின் தெற்கே உள்ள அணைகளில் ஒன்று உடைந்து விழுந்ததால் நகரின் பெரும் பகுதி கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டது. ஒரு பெரிய ஊர் அழிந்து விட்டது. பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மணி நேரமும் அதிகரித்து வருகிறது' என லிபியாவின் கிழக்குப் பகுதி அரசைச் சேர்ந்த ஹிஷாம் சிகியோவாட் கூறினார்.

இந்த அணை உடைப்பால், டெர்ணா நகரின் கணிசமான பகுதிகள் அடித்துச் செல்லப்பட்டதால் அந்தப் பகுதியிலிருந்து சுமார் பத்தாயிரம் பேரைக் காணவில்லை. இதனால் பலி எண்ணிக்கை இன்னும் அதிகமாக உயரும் என்றும் லிபியாவுக்கான சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்கங்களின் பிரதிநிதி டாமெர்ரமடான் ஐ.நா. அமைப்பிடம் தெரிவித்துள்ளார்.

லிபியாவில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வரும் மோதல்கள் மற்றும் குழப்பம் காரணமாக நாட்டின் உள்கட்டமைப்பைப் பராமரிக்க முடியாமல் போனதால்தான் டெர்ணா ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டிருந்த அணை உடைந்து ஆயிரக்கணக்கான உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதாக வரலாற்று ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

சமீபத்தில் ஹிமாசல பிரதேசம், தில்லி, உத்தரகண்ட், நொய்டாவில் பெய்த கடும் மழை, இயற்கைக்கு எதிராக மனிதர்கள் செய்து வரும் சீர்கேடுகளின் வெளிப்பாடுதான் எனவும் சுயநல மனிதர் செய்யும் தவறுகளால் சுற்றுச்சூழல் பெரும் பாதிப்புக்கு உள்ளாகிறது எனவும் மனிதத் தவறுகள் தொடர்ந்தால் இயற்கையின் பழி வாங்கும் நடவடிக்கைகளும் தொடரும் எனவும் நிபுணர்கள் தெரிவித்திருந்தனர்.

இயற்கையின் கொடைகளாகவும், நாட்டின் அரண்களாகவும் விளங்கும் இயற்கை வளங்களை மனிதர்கள் சீரழிப்பதால் சுற்றுச்சூழல் பெரும்மளவில் பாதிப்புக்குள்ளாகிறது. அதனால்தான், நிலநடுக்கம், சுனாமி, பெருமழை, புயல் ஆகியவற்றை நாம் அவ்வப்போது எதிர்கொள்ள நேரிடுகிறது. இனியேனும் சுற்றுச் சூழலைப் பாதுகாத்து அதன் மூலம் மனிதகுலத்தையும் பாதுகாப்போம்.



# கட்சிகளில் மகளிர் இடஒதுக்கீடு: வழிகாட்டும் நாடுகள்

**புது தில்லி, செப். 20:** அதிக பெண் எம்.பி.க்களைக் கொண்ட நாடுகளில் அங்குள்ள கட்சிகளில் மகளிருக்கு இடஒதுக்கீடு இருப்பது ஆய்வில் தெரியவந்துள்ளது.

இந்தியாவில் நாடாளுமன்றம், சட்டப்பேரவைகளில் மகளிருக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்கும் மசோதா மக்களவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த மசோதா சட்டமாகும் நிலையில், மகளிருக்கான அதிகாரம் உறுதி செய்யப்படும். அதே வேளையில், பல நாடுகளில் சட்டபூர்வமான மகளிர் இடஒதுக்கீடு இல்லாவிட்டாலும், கட்சிகளில் பெண்களுக்கு அதிக வாய்ப்புகளை அளிப்பதன் மூலம் மகளிரின் பிரதிநிதித்துவத்தை அந்த நாடுகள் அதிகரித்துள்ளன.

## அரசியலில் மகளிரின் பிரதிநிதித்துவம் (இந்த மாத நிலவரப்படி)

| நாடு | மொத்த மக்கள் பிரதிநிதிகளில் பெண்கள் | நாடாளுமன்றத்தில் மகளிர் இடஒதுக்கீடு | கட்சிகளில் மகளிர் இடஒதுக்கீடு |
|---|---|---|---|
| ஸ்வீடன் | 46% | இல்லை | உள்ளது |
| நார்வே | 46% | இல்லை | உள்ளது |
| தென் ஆப்பிரிக்கா | 45% | இல்லை | உள்ளது |
| ஆஸ்திரேலியா | 38% | இல்லை | உள்ளது |
| பிரான்ஸ் | 38% | இல்லை | உள்ளது |
| ஜெர்மனி | 35% | இல்லை | உள்ளது |
| பிரிட்டன் (கீழவை) | 35% | இல்லை | உள்ளது |
| கனடா | 31% | இல்லை | உள்ளது |
| அமெரிக்கா (பிரதிநிதிகள் சபை) | 29% | இல்லை | இல்லை |
| அமெரிக்கா (செனட்) | 25% | இல்லை | இல்லை |
| வங்கதேசம் | 21% | உள்ளது | இல்லை |
| பிரேஸில் | 18% | இல்லை | உள்ளது |
| ஜப்பான் | 10% | இல்லை | இல்லை |

## இந்தியாவில் மகளிர் மசோதா: கடந்து வந்த பாதை

- இந்தியாவில் கடந்த 1993-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட அரசமைப்புச் சட்டத்தின் 73 மற்றும் 74-ஆம் திருத்தங்கள், அந்தச் சட்டத்தில் ஊராட்சிகள் மற்றும் நகராட்சிகளை அறிமுகப்படுத்தியது. அத்துடன் இந்த உள்ளாட்சி அமைப்புகளில் மூன்றில் ஒரு பங்கு இடங்களை (33%) மகளிருக்கு ஒதுக்கவும் வழிவகை செய்தது. ஆனால், மக்களவை மற்றும் மாநில சட்டப்பேரவைகளில் மகளிருக்கு இதுவரை இடஒதுக்கீடு வழங்கப்படவில்லை.
- நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டப்பேரவைகளில் உள்ள இடங்களில் மகளிருக்கு இடஒதுக்கீடு வழங்குவதற்கு 1996, 1998, 1999 மற்றும் 2008-இல் அரசமைப்புச் சட்டத்திருத்த மசோதாக்கள் கொண்டுவரப்பட்டன.
- 1996, 1998, 1999-ஆம் ஆண்டுகளில் கொண்டுவரப்பட்ட மசோதாக்கள், அந்தக் காலகட்டங்களில் மக்களவை கலைக்கப்பட்டதால் காலாவதியாகின.
- 2008-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட மசோதா மாநிலங்களவையில் நிறைவேறியது. ஆனால், அப்போதைய 15-ஆவது மக்களவை கலைக்கப்பட்டதால், அந்த மசோதாவும் காலாவதியானது.
- தற்போதைய 17-ஆவது மக்களவையில் உள்ள மொத்த உறுப்பினர்களில் (எம்.பி.) 15 சதவீதம் பேர் பெண்களாக உள்ள நிலையில், மாநில சட்டப்பேரவைகளில் உள்ள மொத்த உறுப்பினர்களில் (எம்எல்ஏ) சராசரியாக 9 சதவீதம் பேர்தான் பெண்களாக உள்ளனர்.
- இந்நிலையில், மக்களவை மற்றும் மாநில சட்டப்பேரவைகளில் உள்ள மொத்த இடங்களில் மூன்றில் ஒரு பங்கு இடத்தை (33%) மகளிருக்கு ஒதுக்கும் வகையில், அரசமைப்பு (128-ஆவது திருத்தம்) சட்டம், 2023 மக்களவையில் புதன்கிழமை (செப். 20) நிறைவேற்றப்பட்டுள்ளது.

## 2008, 2023 மசோதாக்களில் உள்ள முக்கிய மாற்றங்கள்

- 2008-ஆம் ஆண்டு மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாவின்படி, ஒவ்வொரு மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசத்தில் உள்ள மக்களவை இடங்களில் மூன்றில் ஒரு பங்கு இடம் மகளிருக்கு ஒதுக்கப்பட வேண்டும்.
- ஒவ்வொரு நாடாளுமன்றம் மற்றும் சட்டப்பேரவைத் தேர்தலுக்குப் பிறகு தனித் தொகுதிகளை சுழற்சி முறையில் மாற்ற வேண்டும்.
- தற்போது (2023) நிறைவேற்றப்பட்டுள்ள மசோதாவின்படி, மக்களவை மற்றும் மாநில சட்டப்பேரவை இடங்களில் மூன்றில் ஒரு பங்கு இடம் மகளிருக்கு ஒதுக்கப்பட வேண்டும்.
- தொகுதி மறுவரையறை நடவடிக்கையை ஒவ்வொரு முறை மேற்கொண்ட பிறகும் தனித் தொகுதிகளை சுழற்சி முறையில் மாற்ற வேண்டும்.

-ஆதாரம்: பிஆர்எஸ் லெஜிஸ்லேடிவ் ரிசர்ச்

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**

**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**

https://www.evastaliniasacademy.in/

**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# புத்தொழில் – புத்தாக்க கொள்கை: முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டார்



பட்டியலினத்தவர், பழங்குடியினர் புத்தொழில் நிதித்திட்டத்தின் கீழ் 8 நிறுவனங்களுக்கு ரூ.10.85 கோடி நிதி வழங்குவதற்கான ஒப்புதல் ஆணைகளை தலைமைச் செயலகத்தில் புதன்கிழமை வழங்கிய முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைச் செயலர் (பொ) வி.அருண் ராய், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க நிறுவன தலைமை நிர்வாக அலுவலர் சிவராஜா ராமநாதன்.

**சென்னை, செப். 20:** தமிழ்நாட்டில் புதிய தொழில்களை ஊக்குவிப்பதற்கான சூழலை மேம்படுத்தவும், ரூ.100 கோடியில் பெரு நிதியத்தை உருவாக்கவும் வசதியாக புத்தொழில் மற்றும் புத்தாக்க கொள்கையை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்.

இதற்கான நிகழ்ச்சி சென்னை தலைமைச் செயலகத்தில் புதன்கிழமை நடைபெற்றது.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழ்நாட்டின் புத்தொழில் சூழ்நிலை மேம்படுத்தும் வகையிலும், தமிழ்நாடு புதிய தொழில்களுக்கான அமைப்புகளைக் கொண்ட இடமாகத் திகழ வேண்டும் என்ற நோக்கத்துடன், புத்தொழில் மற்றும் புத்தாக்க கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது. இந்தக் கொள்கை தமிழ்நாட்டில் உள்ள புத்தொழில் நிறுவனங்களின் உருவாக்கத்தை அதிகரிப்பதற்கும், அந்த நிறுவனங்களின் விரிவாக்கத்துக்கு உறுதுணையாகவும் இருக்கும். மேலும், மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி குறியீடு போன்ற அம்சங்களை அதிகரிப்பதற்கும் உந்து சக்தியாக இருக்கும்.

புத்தொழில் சார்ந்த அறிவாற்றலை மேம்படுத்துதல், மாநிலத்தின் புத்தாக்க சூழல் அமைவை வலுப்படுத்துதல், முதலீட்டு சூழலை வலுப்படுத்துதல் உள்ளிட்ட ஏழு அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு ஐம்பதுக்கும் மேற்பட்ட செயல் திட்டங்களுடன் இந்தக் கொள்கை வடிவமைக்கப்பட்டுள்ளது.

**ரூ.100 கோடியில் பெரு நிதியம்:** பட்டியலினத்தவர், பழங்குடியின சமுதாயத்தினர் பிற துறைகளில் புதுமையான மாதிரிகளை பயன்படுத்தி அவர்களது பொருளாதார சமூகப் பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் விதமாக, ஒரு நிறுவனத்தை உருவாக்கலாம். அவ்வாறு உருவாக்கப்படும் நிறுவனமும் மாநில அரசால் அங்கீகரிக்கப்படும்.

ரூ.100 கோடியில் பெரு நிதியம் ஒன்று உருவாக்கப்படும். இந்த நிதியம், வட்டார அளவில் செயல்படும் புத்தொழில் நிறுவனங்கள், பெண்களால் நடத்தப்படும் நிறுவனங்களில் முதலீடு செய்வதை நோக்கமாகக் கொண்டு செயல்படும் நிறுவனங்களில் முதலீடு செய்வதற்கு சிறப்புரிமை அளிக்கும்.

தொடக்க நிலையில் உள்ள புத்தொழில் நிறுவனங்களுக்கு தேவையான பொருள்கள் மற்றும் சேவைகளை பல்வேறு நிறுவனங்களிடமிருந்து நியாயமான விலையில் பெறக்கூடிய வகையில் அத்தகைய தொகுப்புகள் அடங்கிய ஸ்டார்ட் அப் ஸ்மார்ட் அட்டை திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

ஒடுக்கப்பட்ட சமூகங்களைச் சார்ந்தவர்களால் நடத்தப்படும் புத்தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான பயிற்சிகள், ஆலோசனைகள், வழிகாட்டுதல்களை அளிக்கும் வகையில், சமூக நீதி தொழில் வளர் மையம் நிறுவப்படும்.

புத்தொழில் முனைவில் ஈடுபடும் பெண்களின் பிரத்யேக தேவைகளைக் கருத்தில் கொண்டு பல்வேறு சிறப்பம்சங்களுடன் ஒரு தொழில் வளர் மையம் அமைக்கப்படும் போன்ற பல்வேறு அம்சங்கள் புத்தொழில் கொள்கையில் இடம்பெற்றுள்ளன.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து, பல்வேறு புத்தொழில்களை மேற்கொள்ளும் எட்டு நிறுவனங்களுக்கு பங்கு முதலீட்டு ஒப்புதல் உத்தரவுகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைச் செயலர் வி.அருண்ராய், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் தலைமை நிர்வாக அலுவலர் சிவராஜா ராமநாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**

**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**

https://www.evastaliniasacademy.in/

**Contact Number - +91-8678969915, +91-9940332851**